உ

சிவமயம்

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பன்

# அழகன் ஐயப்பன்



வெளியீடு:-

அகில இலங்கை யாழ் கோண்டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானம், யாழ்ப்பாணம்.

**27.12.2017**

சபரீஷ வாசம்

கலாபூசணம், கலைநகரி, கலைமாமணி,

ஈழவூர் வைப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார்-MA.JP

குருசாமி - அருள்மிகு சபரிகிரீஸ்வர ஐயப்ப சேவாசங்கம் - இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"ஓம் ஶ்ரீ வெள்ளிப்பள்ளத்து வீரகத்தி பிள்ளையாரே சரணம் ஐயப்பா
ஓம் ஶ்ரீ பூர்ணா புஸ்கலா உடனுறை துத்தியில் ஐயனே சரணம் ஐயப்பா
ஓம் ஶ்ரீ சபரீஷ வாசனே சரணம் ஐயப்பா
ஓம் ஶ்ரீ யாழ் கோண்டாவில் ஈழத்து சபரிஷ மலையானே சரணம் ஐயப்பா
ஓம் ஶ்ரீ சபரிமலை தர்மசாஸ்தாவே சரணம் ஐயப்பா"

# அழகன் ஐயப்பன்







வெளியீடு:-
**அகில இலங்கை யாழ் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை**
சபரீஷ ஐயப்பன் தேவஸ்தானம் (23வது தீர்த்த யாத்திரைக்குழு)

**கலாபூசணம் "சபரீஷவாசம்"**
ஈழவூர் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி
சுமுகலிங்க சிவாச்சாரியார்.(MA.JP)

**2017.12.27**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் சாமியே சரணம் சரணம் ஐயப்பா

# ஆசியுரை

## குருபாதம் பணிந்து வழங்கும் ஆசியுரை

மணிகண்டன் மண் மேல் உதித்து மனித வடிவில் வந்த கண்கண்ட தெய்வம் ஆவான். அவன் வழி மனித இனம் உயர்வடையவே சைவ சமயம் விரதம் என்ற மேல் நெறியை உலகிற்கு கொடுத்துள்ளது. தெய்வ அருட் கருணையேயாகும். விரதங்கள் எல்லாவற்றுக்கும் விதிகள் உண்டு மணிகண்டன் விரதவிதிகள் அதீதமானவை.

ஒவ்வொரு மானுடரும் மனிதம் என்றால் என்ன என்பதனை உணர வேண்டும். எனில் தன்னை இழக்க வேண்டும். அதாவது நான் என்ற நிலை ஒடுங்குதல் வேண்டும் புலன் வழி செல்வது மனதின் அமைதி இன்மையை வெளி கொண்டு வரும் செயலாகும். ஐம்புலன்கள் ஒடுங்க மனம் ஒரு நிலை அடையும், மனம் ஆனந்தமடையும் பேச்சு வார்த்தைகள் குறையக்குறைய ஆன்மா உயர்வடையும் ஆன்மாவின் உயர்வே மனிதப்பிறவியின் நோக்கமாகும்.

அவ்வகை உயர்வே தெய்வீகப் பொலிவாகும்.தெய்வீக நிலை அடைந்த ஆன்மாக்களுக்கு சமர்ப்பணம் செய்வது இறையருள் வந்தவர்களின் எண்ணத்தின் வெளிப்பாடாகும். இவ்வருட்பணி சிறக்க அறப்பணி புரிந்த அனைவருக்கும் என் நல்லாசிகள் உரித்தாகட்டும் தாரணிப் பிறிண்டேர்ஸ் உரிமையாளர், பணியாளர்கள் அனைவரின் அறப்பண்பு மேலோங்க சாமி ஐயப்பன் அருள் புரிவராக!

சாமியே சரணம் ஐயப்பா

சைவப்புலவர் சைவசித்தாந்த பண்டிதர்
திருவருள் திவ்விய ஆதங்கன்,
வ. ஆ. தங்கமயில் M.A
நில அளவையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் சாமியே சரணம் சரணம் ஐயப்பா



அகில இலங்கை யாழ் கோண்டாவில் ஈழத்துச் சபரிமலை
சபரீச ஐயப்பன் தேவஸ்தானம், யாழ்பாணம்.
தேவஸ்தான அறங்காவலர், பிரதமகுரு, குருசாமி,
**பிரம்ம ஸ்ரீ கி.ஹரிஹரசுத குருசாமி, குருக்கள்**
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.

# ஆசியுரை

'அன்பே சிவம்'

ஈழத்து சபரிமலை யாழ் கோண்டாவில் அருள் மிகு சபரிஷ ஐயப்பன் தேவஸ்தானத்தில் குருசாமி கலாபூசணம் சிவத்திரு கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் அவர்கள் 23வது தீர்த்த யாத்திரை குழுவினர் பெயரால் வெளியீடு செய்யும் "**அழகன் ஐயப்பன்**" என்னும் வழிபாட்டு நூலுக்கு ஆசியுரைகள் வழங்குவதில் இவ்வாலய குருசாமி அறங்காவலர் என்ற வகையில் ஆசியுரை வழங்குவதில் அகமகிழ்வடைகின்றேன். விரத விதிமுறைகள் சரணக் கோவை கவசம் திருமந்திரம் கூறும் சைவ நாற்பாதங்கள் அர்ச்சனை வழிபாடுகள் சுந்தரர் தேவாரங்களை தாங்கி வெளிவருவது தனிச்சிறப்பம்சமாகும்.

சைவம் சிவம் சம்பந்தமானது சமயங்கள் பல பெயர் கொண்டு அழைத்தாலும் அனைத்திற்கும் ஆதிமூலம் சைவசமயமாகும் . சைவசமய முதல் நூல்களே காரணமாக அமைகின்றன. என்பதனை ஒவ்வொருவரும் உணரும் வகையாக இந்நூல் வெளிவருவது ஐயப்பன் அருளேயாகும். அனைவரும் நூலைப்பெற்று உண்மையை உணர்வோமாக.

கி.ஹரிஹரசுத சிவாச்சாரியார் குருசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் சாமியே சரணம் சரணம் ஐயப்பா

# வாழ்த்துரை

ஈழத்துச் சபரிமலை யாழ் கோண்டாவில் சபரீஸ்வர ஐயப்பன் தேவஸ்தானம் மகரஜோதிப் பெருவிழாவை சிறப்பாக இலங்கை மணித் திருநாட்டில் நிறைவாக்கி வருகின்றமை அனைவரும் அறிந்த விடயமாகும். கன்னிச்சாமிமார்கள், சாமிமார்கள், அடியார்கள் அனைவரும் பயன்படும் படியாக கலபூசணம் கலை நகரி, சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் நூல் வெளியீடு செய்து வருகின்றார். ஏவிளம்பி வருடம் "**அழகன் ஐயப்பன்**" என்னும் நூல் இவ்வாண்டு மலர்வது ஐயனருளேயாகும் .

வன்னேரிக்குளம் பொன்னுத்துரை அழகேந்திரம் (கந்தசாமி) அவர்கள் 23.03.2013 (பங்குனி வளர்பிறை ஏகாதசி திதியில்) தேகயோகம் பெற்றார். இவர் ஆரம்ப காலத்தில் இந்நூலாசிரியரின் வளர்ச்சிக்கு அளப்பரிய சிறந்த ஆன்மீகப் பணி ஆற்றியவர் ஆவார். அவரது அர்ப்பணிப்பான பணிகளை நினைவு கூர்ந்து சிவ வழிபாட்டு மலர் ஐயப்பன் பாதக்கமலங்களுக்கு சமர்ப்பணம் செய்வது ஐயப்ப சேவ சங்கத்தின் தலையாய கடமையாகும். என்பதுணர்ந்து சமர்ப்பணம் செய்கின்றோம். இப் பணிகளில் பங்கு பற்றிய அனைத்து உள்ளங்களிற்கும் இந்நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த தாரணிப் பிறிண்டேர்ஸ் அன் ஆட், உரிமையாளர் செல்வி ஜெயறாஜ் றஜிகலா அவர்களுக்கும், அந் நிறுவனப் பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் கைலைநாதன் திருவருள் புரிய பிரார்த்தனை செய்து நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி கமலாதேவி குணசிங்கம்,

காப்பாளர்,

அருள் சபரி கிரீஸ்ர ஐயப்ப சேவாசங்கம் – இலங்கை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் நமசிவாய சிவாயநம ஓம்
ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# சமர்ப்பணம்

நந்தன வருடம் பங்குனித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை வளர்பிறை எகாதசித் திதி (2013.03.23) அன்று தேகவியோகம் பெற்ற பொன்னுத்துரை கந்தசாமி அழகேந்திரம் அவர்கள் வன்னேரிக்குளத்தை வாழ்விடமாகக் கொண்டவர். அவரது ஆன்மா திருக்கைலைநாயகி உடனுறை திருக்கைலாயன் திருப்பாத கமலங்களைச் சென்றடைய வேண்டுமெனப் பிரார்த்தனை செய்து சபரிமலையான், சற்குருநாதன் பாதகமலங்களுக்கு **'அழகன் ஐயப்பன்'** என்னும் பூசை வழிபாட்டுஅருள்நூலைச் சமர்ப்பணம் செய்கின்றோம்.



கலாபூசணம், கலைநகரி, கலைமாமணி,
சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் - **MA.JP**
குருசாமி - சபரிகிரீஸ்வர ஐயப்ப சேவாசங்கம் - இலங்கை
ஆலய குருசாமி, சுவாமிமார்கள், அடியார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
ஓம் சாமியே சரணம் சரணம் ஐயப்பா
'அன்பே சிவம்'

# அணிந்துரை

சமயமும் பண்பாடும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை. **"அழகன் ஐயப்பன்"** எனும் இந்நூல் சைவத்தமிழ்ப் பண்பாட்டில் ஐயப்ப விரத முறைகள், ஐயப்ப விரத அடியார்கள் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகள் என்பவற்றினை சிறப்பான முறையில் எடுத்தியம்பியதுடன் மனிதன் மனிதனாக வாழ்வதற்கு இன்றைய உலகில் சைவ விழுமியங்கள் இன்றியமையாதவை. எனவே அவை பற்றிய விளக்கங்களையும் காத்திரமான முறையில் வெளிப்படுத்துவதுடன் ஐயப்பன் பாடல்கள், சுந்தரமூர்த்தி நாயனார் பாடல்கள், திருமந்திரத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்தாம் தந்திரம், நாலாம் தந்திரம் இவையனைத்தும் சைவசமய தாற்பரியங்களை எடுத்து விளக்குகின்றன.

காலத்தின் தேவை அறிந்து இந்நூலாசிரியர் ஈழவூர் சைவப்புலவர், கலாபூசணம் சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் MA.JP அவர்கள் தன் வாழ்வையே சைவத்தமிழ்ப் பணிக்கு அர்ப்பணித்து உயர்ந்த பணிகளை ஆற்றிவருவது இறைசித்தமே. இவர்பணி சைவத்தமிழ் உலகம் முழுவதும் உயர்வடைய அடியேன் இறைபாதத்தை இறைஞ்சி நிற்கின்றேன்.

சுபம்

மிருசுவிலூர் இளஞ் சைவப்புலவர்,
சிவஞானப்பிரியன், சைவசின்மயர்,
கமலநாதன் கயிலைவாசன் B.A(Hons).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் சாமியே சரணம் சரணம் ஐயப்பா

'அன்பே சிவம்'

# முன்னுரை

இலங்கை மணித்திருநாடு சிவமணம் கமழும் திவ்விய பூமியாகும். இதனாலேதான் திருமூலர் இலங்கையயைச் சிவபூமி என்றழைத்தார் என்பது உள்ளுணர்வு. அகில உலகிலும் சபரிஷ ஐயப்பனின் வழிபாடு பல்கிப் பெருகி வருகின்றமை ஐயப்பனின் மகிமையை உணர்த்தி நிற்கின்றது. யாழ்ப்பாணம் கோண்டாவில் சபரீஷ ஐயப்பன் ஆலயத்தில் ஆண்டு தோறும் தீர்த்த யாத்திரை குழுவினால் வெளியீடு செய்யும் ஐயப்பன் அருள் நூல் **"அழகன் ஐயப்பன்"** என்றும் பெயரைத் தாங்கி இவ்வாண்டு வருகின்றது. வழிபாட்டு முறைகள் சரணக்கோவை கவசம், ஆலய வழிபாடு, சைவசமயம் கூறும் நாற்பாதங்கள் மார்க்கங்கள், முத்தி வகைகள் அவற்றின் உண்மைகள், அர்ச்சனை வழிபாடுகள் என்பவற்றை உள்ளடக்கி வருகின்றது.

சைவ சமயத்தின் தொன்மைகள் மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்தவை, வழிபாடுகளும் அவ்வகை அமைவேயாகும். அதனை அனைவரும் உணர்வார்களாக பொன்னுத்துரை கந்தசாமி அழகேந்திரம் அவர்கள் வன்னேரிக்குளத்தை வதிவிடமாகக் கொண்ட இவரது சிவப்பணிகள் தன்னலன் கருதாப் பணிகளாகும். ஐயப்பன் ஆரம்பித்த வேளையில் தன்னாலான அர்ப்பணிப்பான சிவப்பணிகள் மேற்கொண்டவர் அவர் சிவப்பேறு அடைந்த வேளையிலும் அவரது பணியைப் பாராட்டி **"அழகன் ஐயப்பன்"** என்றும்அருள் நூலைச் சமர்ப்பணம் செய்ய எண்ண வைத்தது சிவனருளேயாகும் அவ்வகை சாமிமார்கள்,அடியார்கள் அனைவரும் இச் சிவ வழிபாட்டு நூலைப் பெற்று ஐயன் அருள் பெற்றுய்வீர்களாக!

கலாபூசணம்

கலைநகரி,கலைமாமணி, ஜோதிதாசன், சைவசிரோன்மணி, சமூக திலகம், தேசோதயதீபம், சிவநெறித்தொண்டன், ஈழவூர். சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், இந்து தர்மாசிரியர்

சிவஸ்ரீ. கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் சிவாச்சாரியார் MA.JP

குருசாமி - சபரிகிரீஸ்வர ஐயப்பா சேவாசங்கம், இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழுமியங்கள்

## சமூக உறவு

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்பது ஓர் அனுபவ மொழி மனிதன் காட்டு மிராண்டியாய் வேட்டையாடித் திரிந்த காலத்திலும் தனது பாதுகாப்பைக் கருதிக் கூட்டமாகவே வாழ்ந்தான்.

இவ்வாறு கூடி வாழ்கையில் ஒருவன் தனது நன்மையை மட்டும் கருதி வாழ்தல் இயலாது, தான் வாழும் கூட்டத்தின் பொது நன்மைக்காக விட்டுக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல எற்படலாம். தனக்குத் துன்பம் தருவதாயினும் மற்றவருக்கு இன்பந் தருவதாயின் அதனைச் செய்ய நேரலாம். சமூகஉறவினை விரும்புபவர் இவற்றை மகிழ்ச்சியோடு செய்யத்தயங்கார்.

மனிதர்கள் படிப்படியாக அறிவு, நாகரிகம், கல்வி, பண்பாடு என்பவற்றில் "வளர வளர வாழு வாழவிடு" என்ற குறிக்கோளினைக் கடைப்பிடிப்பது அவசியமாயிற்று. இக்குறிக்கோள் மனிதன் வாழும் சமூகத்தின் மீது அவன் பற்று வைக்க இடம் அளித்தது. இந்தப் பற்றின் விரிவே சமூக உறவாகும்.

மனிதன் ஒரு சமூக பிராணி. எனவே எந்த வகையிலும் சமூக உறவினை அவன் வளர்த்தே ஆக வேண்டும். அன்பு, அனுதாபம், விட்டுக்கொடுக்கும் பண்பு, தன்னைப்போல் பிறரையும் கருதல், சமூக வளர்ச்சிக்குத் தன்னால் இயன்ற பங்களிப்பினை வழங்கல் என்பன வளர்ச்சி அடைந்துள்ள சமூகங்களிலே ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கப்படுகின்றன.

சமயம், மொழி, கலை, அறிவியல் வளர்ச்சியிலே சமூக உறுப்பினன் ஒவ்வொருவனும் பங்கு கொள்வது அவசியம். ஆனால் குழுக்களாகப் பிரிந்து தமது குழவில் நன்மைக்காகச் சமூகத்தைப் புறக்கணிப்பதோ, எதிர்ப்பதோ தவறாகும். மொழி வெறி, மதவெறி என்பன சமூக உறவைப் பாதித்து மனிதனை மிருகமாக்கி விடுகின்றன. ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதும் விட்டுக்கொடுப்பதும் பரிவுகாட்டுவதும் மிகமிக அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமம் வீட்டிலே தொடங்குகின்றது; என்பர். தருமத்திற்கு ஒரு பொருள் கடமை என்பதாகும். எம்மைப் பெற்றுப் பேணி வளர்ப்பவர் பெற்றோர் அன்பு காட்டி உதவி புரிபவர் உடன் பிறந்தார், மற்றம் உறவினர். இவர்கள் யாவரும் வீட்டு உறுப்பினர்கள் இவர்களில் அன்பு செய்தல் என்பன சமூக உறவுக்கான தொடக்கப் பயிற்சிகள் ஆகும்.

வீட்டுச் சமூகம் பாடசாலைச் சமூகமாக விரிகின்றது. அடுத்து, தொழில் செய்யும் இடம், பொதுஇடம், சமய வழிபாட்டிடம் எனப் பலவாக வளர்கின்றது. காலப்போக்கில் நாடு, உலகம் என்று பெரிய சமூகம் ஒன்றில் நாங்கள் இணைகின்றோம். அந் நிலையில்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (கேளிர் உறவினர்)
"எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றும் அறியேன் - பராபரமே"

என்ற மிக விரிந்த மனப்பான்மை தோன்றும் சமூக உறவின் மிக உச்சமான நிலை இது தான் என்பதனை உணரவேண்டும்.

சமூக அமைதிக்குச் சட்டங்கள் ஆக்கப்படுகின்றன. நீதிமன்றங்கள் அவற்றைச் செயற்படுத்துகின்றன. சமூக உறவினைப் பேணுவோர் சட்டத்துக்கு மதிப்பு அளித்தல் வேண்டும்.

சுருங்கச் சொன்னால் "ஊர் ஓடுகில் ஒத்து ஓடு ஒருவன் ஓடுகில் கேட்டு ஓடு" என்ற பழமொழி சமூக உறவைக் கட்டிக் காப்பதற்கும் பொருந்துவதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணைக் கொத்துதல், கடகங்களில் இட்டுக் கரைகளிற் சென்று குவித்தல் சுவரின் இடிபாடுகளைச் சரி செய்தல் என்று பல பணிகள் இச் சிரமதானத்தில் இடம் பெறும். குழுக்கள் குழுக்களாய் வேலைகளைப் பிரித்துச் செய்தால் மிக விரைவில் குளம் பழைய நிலையை அடையும். இதற்கு ஐயமே இல்லை.

பாடசாலைகள், பொது விளையாட்டு மைதானங்கள், சனசமூகநிலையங்கள், என்பன சிரமதானப் பணிகள் செய்ய உகந்த இடங்கள் "ஊர் கூடித் தேர் இழுத்தல்" என்ற பழமொழிக்கு அமைவாய் ஊரவர் கூடி முயன்றால் கூடிய விரைவில் குறைந்த செலவில் பலருக்கும் பயன்படும் பணிகளைச் செய்து முடிக்கலாம்.

உடலால் உழைக்க முடியாத முதியவர்கள் உணவு,பானம் உரிய நேரங்களில் வழங்கி உதவலாம். மேற்பார்வை செய்து, ஆலோசனைகள் வழங்கலாம், உற்சாகம் ஊட்டலாம்.

**சிரமதானத்தினால் விளையக் கூடிய நன்மைகள் :**

1. தன் கையே தனக்கு உதவி; என்ற தன்னம்பிக்கை மக்களிடையே வளரும்.
2. ஒற்றுமை ஏற்படவும் கூட்டாகச் செயற்படுவதால் உற்சாகம் அடையவும் வாய்ப்பு ஏற்படும்.
3. ஊர்ப்பற்று, சமூக உணர்வு என்பன வளரும்.
4. குறைந்த செலவிற் கூடிய பயன் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

கடவுளின் படைப்பில் மிக உயர்ந்தவன் மனிதனென பகுத்தறிவு அவனுக்கு மட்டுமே கிடைத்த அருட் கொடை. இந்தக் கொடையினால் தக்கது இது தகாதது இது என்று வேறுபடுத்தும் திறமை அவனுக்கு வாய்த்திருக்கிறது.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"

என்பர் திருமூலர் .கடவுளையே அன்பு வடிவாகக் காண்பதும், அந்த அன்பைத் தன் சகோதர மனிதனில் காட்டுவதும் மனிதன் ஒவ்வொருவனதும் கடனாகும். இதனையே மனித நேயம் என்கின்றோம்.

இராமபிரான் திருமாலின் அவதாரம். அவர் மனிதனுக்குரிய பண்புகளிலே சிறந்த பண்பாகிய மனித நேயத்தைக் கடைப்பிடித்து எமக்கு வழிகாட்டினார். வேடனாகிய குகன், அரக்கனாகிய விபீடணன். குரங்கரசனாகிய சுக்கிரீவன் முதலிய தன்னிலும் பல மடங்கு கீழ் நிலையில் இருந்தவர்களிலும் அவர் நேயம் காட்டினார். அவர்களைத் தன் உடன் பிறப்புக்களாய் ஏற்று உதவினார்.

இன்று இராமபிரானின் வழியைப் பின்பற்றி மனித நேயம் செலுத்த வேண்டிய அவசிய தேவை நமக்கு ஏற்பட்டிருக்கிறது. உள்நாட்டுப் போரிலே கொலையுண்டவர் பலர். உடல் ஊனம் அடைந்தவர் மிகப்பலர். அகதிகளாய் வாழ இடமின்றி உண்ண உணவின்றி அலைபவர் மிகப்பலர். இவர்களில் இறந்தோரின் உறவினருக்கு நாம் எம்மால் இயன்ற உதவி செய்தல் வேண்டும். உடல் ஊனம் உற்றவருக்கு வழிகாட்ட வேண்டும். அகதிகள் ஆனவர்களுக்கு எம்மாலான உணவுப்பொருள், பணம் பிற பொருட்களை உதவ வேண்டும்.

மனிதநேயம் கொண்டு பொதுப்பணிகளில் ஈடுபட்டுள்ள செஞ்சிலுவைச் சங்கம் போன்றவற்றின் பணிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டியது எமது கடன்

மகான்கள் வரிசையில், சுவாமி விபுலானந்தர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், மகாத்மா காந்தி, அன்னை திரேசா வரையுள்ள பெரியோர்கள் மனித நேயத்தினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதருக்குத் தொண்டு செய்யத் தம்மையே முற்றாக அர்ப்பணித்தவர்கள். இவர்களின் வழியைப் பின்பற்றிச் சகோதர மனிதருக்கு எம்மாலான மனித நேயத் தொண்டுகளைச் செய்வோமாக.

## நல்லவை செய்தல்

நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாமலாவது இரு என்றார் ஒர் பெரியார்.

இவரின் கூற்றிலே முதலாவது பகுதி மனிதன் பிறந்ததன் நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் இரண்டாவது பகுதி நன்மை செய்வதை ஊக்குவிக்கவில்லை. காரணம் மனிதன் சுய நலம் உள்ளவன் என்பதால் பிறருக்கு நன்மை செய்வதில் அவனுக்கு ஈடுபாடு இருக்காது என்று அந்தப் பெரியார் நம்பியதே. இந்த நம்பிக்கையை உடைத்தெறிய வேண்டியது அவசியமாகும்.

நன்மை செய்யப் பிறந்த நாம் பிறருக்கு நன்மை செய்தே ஆக வேண்டும்;; என்று உமது உள்ளங்களிலே உறுதி செய்து கொள்வோம். நல்லவை செய்தல் என்றால் என்ன தனக்கும் பிறருக்கும் எந்தவிதத்திலும் துன்பமோ, இடையூறோ ஏற்படாதவற்றைச் செய்தல் என்பதாகும்.

எம் ஒவ்வொருவருக்கும் மூன்று கருவிகள் உள்ளன. ஒன்று மனம், மற்றது வாக்கு (பேச்சு) மூன்றாவதாயுள்ளது காயம் (உடல்) இவற்றைச் சைவசமயிகள் திரிகரணங்கள் என்பர் (திரி – மூன்று, கரணம் – செயற்படும் கருவி)

மனத்தினால் நல்லவற்றை நினைத்தல் வேண்டும் "பாரதியார் நினைவு நல்லது வேண்டும்" எனப்பாடியுள்ளது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

வாக்கினால் தீயவற்றைப் பேசுதல், பிறருக்கு மனத் துன்பம் உண்டாக்கத்தக்க கொடிய வார்த்தைகளைக் கூறுதல் என்பனவும் நல்லன செய்யாமையா அவை தீயனவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயினாற் சுட்ட புண் உள்ளே ஆறும். (வெளியில் காய அடையாளம் இருக்கலாது. அதனால் தீமை இல்லை) ஆனால் பிறரை நாவினாற் சுடுவதாகிய கொடிய சொற்கள் என்றைக்கும் ஆறமாட்டா. வடுக்களாய் நிலைத்திருக்கும். எனவே இனிமையானவையும் நல்லவையுமான சொற்களைப் பேசுவோம். இனிய சொல் இருக்க, கொடிய சொல் பேசுவது சுவையான பழத்தை உண்ணாது புளிப்பழத்தை உண்ணத் தேடுவது போலாகும். இது வள்ளுவரின் வாய்மொழி.

உடலால் செய்யப்படும் தீமைகள் மிகப்பல கொடிய யுத்தங்கள்; கொலைகள், கொள்ளைகள் என்ற யாவும் உடலால் செய்யப்படும் தீமைகளே இத் தீமைகளைச் செய்யாது முற்றிலும் கைவிடல் வேண்டும். அப்பொழுது தான் உலகம் அமைதியடையும். சாந்தியும் சமாதானமும் உண்டாகும்.

"அன்பே சிவம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை செல்லும் மாலையணிந்த சாமிமார்கள் விரத காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

01. சபரிமலை செல்ல மாலை அணிபவர்கள் கார்த்திகை தமிழ் மாதம் முதலாம் திகதி மாலை அணிதல் வேண்டும். அன்று அணியத் தவறும் பட்சத்தில் கார்த்திகை மாதம் 1–5 இற்குள் மாலை அணிதல் வேண்டும்.

02. மாலை அணிந்தால் தொடர்ந்து 45 நாட்கள் அல்லது தை மாதம் தமிழ் மாதப் பிறப்பு மகரஜோதி பெருவிழா வரை விரதம் இருந்து மாலை கழற்றல் நிகழ்வுடன் விரதம் பூர்த்தியாக வேண்டும்.

03. சபரிமலை விரதத்திற்கு மாலை அணிவதற்கு ஓர் குருசுவாமியின் உதவியை நாட வேண்டும். அவர் பல தடவைகள் சபரிமலையில் பதினெட்டுப்படி பூசை செய்தவராகவும் பல சுவாமிமார்கள் தன்னுடன் ஐயனிடம் அழைத்து சென்று வருபவராகவும் இருத்தல் வேண்டும்.

04. குருசுவாமியின்றி மாலை போடுவதாய் இருந்தால் கோவிலிலோ அல்லது இல்லத்திலோ சுவாமியின் திருவுருவப் படத்தில் மாலையை வைத்து ஆலய குருவின் உதவியுடன் தாய், தந்தையை வணங்கி தீபம் காட்டி அந்த மாலையை போட வேண்டும்.

05. விரத காலத்தில் கறுப்பு நிற அல்லது நீலநிற வேட்டி, சால்வை போன்ற வஸ்திரங்களை அணிதல் வேண்டும்.

06. உருத்திராட்ச மாலை, துளசி மணிமாலை ஐயப்பன் திருவுருவம் பதித்த பதக்கம் போன்றவற்றை அணிதல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. நாள்தோறும் விடியற் காலையில் குளிர்ந்த நீரில் குளித்து காலை, மதியம், மாலை போன்ற நேரங்களில் 108 சரணங்கள் சொல்லி ஐயனை துதித்து பஜனைகள் தனியாகவோ, ஐயப்ப சாமிமார் களுடனோ, ஐயப்ப அடியார்களுடனோ சேர்ந்து செய்ய வேண்டும்.

08. விரத காலத்தில் பிரமச்சாரியம் கடைப்பிடித்தல் அவசியம்.

09. மனம், மொழி, செயல் ஒன்றிலும் தீய எண்ணம் இருத்தல் கூடாது.
10. விரத காலத்தில் முடி, நகம், வெட்டிக்கொள்ளுதல் , முகச்சவரம் செய்தல், குடை, பாதணி போன்றவற்றை பயன்படுத்தல் கூடாது.

11. சூது, வாது, பொறாமை, வஞ்சம், கள்ளத்தன்மை, மது அருந்துதல், புகைப்பிடித்தல், வெற்றிலை போடுதல், சினம், கோபம், கொல்லுதல், புலால் உண்ணுதல் முதலியவற்றை அடியோடு விலக்க வேண்டும்.

12. ஐயன் மாலை அணிந்த பின் எங்கும் எதிலும் ஐயப்பன் என்ற நினைவு மனதில் உதிக்க வேண்டும்.

13. சுவாமியே சரணம், ஐயப்பன் சரணம் என்று சொல்லி ஒருவருடன் பேசவோ கதைக்கவோ தொடங்கமுன் ஐயன் நாமம் சொல்ல வேண்டும்.

14. மாலை அணிந்து கொண்டபின் எக்காரணம் கொண்டும் கழற்றக் கூடாது. உறவில் இறந்தால் ஈமச்சடங்குக்கு கலந்துகொள்ள வேண்டுமென்றால் ஐயனை வணங்கி மன்னிப்புக்கோரி மாலை யைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிவிட வேண்டும். பின்பு விரதம் முடியும் வரை இடையில் மாலை அணியக் கூடாது.

15. மாலை அறுந்தால், பழுதடைந்தால் வேறு மாலையை மாற்றிக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. விரத காலத்தில் பகலில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

17. படுக்கும் பொழுது கட்டில், மெத்தை, தலையணை போன்றவற்றைப் பயன்படுத்தல் கூடாது.

18. மண்டலபூர்த்தி முடிந்தபின் மிகுதி நாட்கள் ஐயப்பனை காணும் நாளாக கருதப்படும்.

19. மாலை போட்ட சாமிமார்கள் வீதியில் உலாவும் போதோ, பயணம் செய்யும் போதோ அவர்கள் முன் தென்படுபவர்கள் யாராக இருந்தாலும் ஐயப்பனாகவே கருதப்படுவார்கள்.

20. சாமிமார்கள் குடும்ப உறவினருக்கோ, மற்றவருக்கோ ஓர் ஈக்கால் கூட அடித்து துன்புறுத்தக் கூடாது.

21. மாலை அணிந்த பின் சந்திக்கும் ஆண்களை ஐயப்பன் என்றும் பெண்களை மாளிகைப்புறத்து அம்மன் என்றும் சிறுவர்களை மணிகண்டன் என்றும் சிறுமிகளை மஞ்சமாதா என்றும் அழைக்க வேண்டும்.

22. ஒவ்வொரு நாளும் குருசுவாமியின் சொற்படி பஜனை பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ள வேண்டும்.

23. நாள்தோறும் ஆலயத்திலோ, வீட்டிலோ பஜனை வழிபாடு முடிந்தவுடன் சாமிகள், குருசுவாமிகள் ஆகியோருக்கு பாத பூஜை செய்ய வேண்டும்.

24. முதலில் மாலைபோட்ட சாமிகள் தனது இல்லத்தில் மற்றைய சாமிகளையும் குருசுவாமிகளையும் அழைத்து ஐயப்பனுக்கு உகந்த அன்னப்பிரபுவைக் காண அன்னதானம் வழங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. சாமிமார்கள் சமைத்த உணவுகளையே உட்கொள்ள வேண்டும் அல்லது மனைவியோ, தாயோ சமைத்த உணவை உட்கொள்ள வேண்டும்.

26. இருமுடிகட்டு பூஜை வீட்டிலோ, அல்லது கோயிலிலோ அல்லது குருசுவாமி வீட்டிலோ நடத்த வேண்டும். கணபதி பூஜை நடத்தி ஐயப்பனுக்கு பூஜை செய்து குருசுவாமியை வணங்கி பெற்றோர் களை வணங்கி ஐயப்பன் சரணங்கள் சொல்லிக் கொண்டு கட்டு நிறைக்க வேண்டும்.

27. சபரிமலைக்கு போகிறேன் என்று சாமியே சரணம் என்ற சரணகோஷம் எழுப்பி மலைக்கு புறப்பட வேண்டும்.

28. இருமுடி சுமந்து யாத்திரை செல்லும் போது வீட்டு வாசலிலே தேங்காய் உடைத்து பின் புறமாக திரும்பிப் பாராது செல்ல வேண்டும்.

29. கன்னி ஐயப்பமார்கள் யாத்திரை புறப்படுமிடத்தில் இருந்து சந்நிதானம் வரை இருமுடியை தாமே இறக்கவோ ஏற்றவோ கூடாது. மூத்த ஐயப்ப சாமிமார்கள் அல்லது குருசுவாமியின் உதவியைப் பெற வேண்டும்.

30. சபரிமலைக்கு செல்லும் பாதையில் சரணம், சாமியே சரணம் என்ற கோஷம் ஒலிக்க வேண்டும்.

31. பம்பை நதியிலே நீராடி நம்முன்னோர்களின் ஆத்மசாந்திக்கு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

32. குருசுவாமிக்கு தெட்சணை கொடுக்க வேண்டிய சமயங்களில் ஐயப்ப சுவாமிமார்கள் தங்கள் வசதிக் கேற்றவாறு கொடுத்து குருசுவாமியின் அருளைப் பெற வேண்டும். இதில் எந்தவித நிபந்தனையும் கிடையாது.

33. ஐயப்ப சுவாமிமார்கள், கன்னிச்சாமிமார்கள் பெரு வழிப்பாதையால் (அழுதை வழி) சென்று வருவது மிகவும் நற்பலனை அளிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. யாத்திரையில் மகரஜோதியை தரிசித்து வீடு திரும்பியதும் ஐயப்பனின் திருவருள் பிரசாதத்தினை தலையில் ஏத்தியபடி வாயிற்படியில் தேங்காய் அடித்து வீட்டிற்குள் செல்ல வேண்டும். பின்பு பூஜை அறையில் கற்பூர ஆராத்தி காட்டி கட்டினை அவிழ்த்துப் பூஜை செய்து பிரசாதங்கள் எல்லோருக்கும் வழங்க வேண்டும். பின்பு பதினெட்டாம்படி பூஜை பாட்டுப்பாடி கடைசியில் மங்களம் பாட வேண்டும்.

35.குருநாதர் மூலமாக மாலையைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப்படத்திற்கு அணிவித்து விரதத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஐயப்பன் திருவருள் எல்லோருக்கும் எல்லா வரமும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்து ஐயனை வணங்க வேண்டும்.

36. சாமிமார்கள் கறுப்பு, நீல நிற வேட்டிகளை அணிய வேண்டும். விரதம் முடியும்வரை வேறு ஆடை வகைகள் அணியக்கூடாது.

37. சாமிகள் மண்டல பூர்த்தி பூஜைகள் யாவும் முடிந்தவுடன் மாலை கழற்றுவதற்கு குருசாமியின் உதவியை நாட வேண்டும். குருசாமி இல்லாத பட்சத்தில் குருசாமி தனக்குப் பதிலாக வேறு குரு சாமியை நியமிக்க வேண்டும். அவர் மூலம் மாலை கழற்றும் நிகழ்வு நிறைவுபெறும்.

38. இவ்வளவு விதி முறைகளை கடைப்பிடித்தால் நீங்கள் கேட்கும் வரம் நிச்சயமாக ஐயனிடம் பெறுவீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை அணியும் பொழுது கூற வேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குரு முத்ராம் நமாம்யஹம்!
வன த்ராம் சுத்த முத்ராம் ருத்ரமுத்ராம் நமாம்யஹம்!!

சாந்த முத்ராம் சத்யமுத்ராம் வருக முத்ராம் நமாம்யஹம்!
சபர்யாச்ராம் ஸத்யேன முத்ராம் பாது ஸதாபி மே!!

குருதஷிணாயா பூர்வம் தஸ்யா நுக்ரஹ காரிணே!
சரணாகத முத்ராக்யம் த்வன் முத்ராம் தாரயாம்யஹம்!!

சின்முத்ராம் கேசரீ முத்ராம் பத்ராம் சமாம்யஹம்!
சபர்யாசல முத்ராயை நமஸ் துப்யம் நமோ நம:!!
அபூர்வ மசலா ரோஹ – திவ்ய தர்சன காரணம்
சாஸ்த்ரு முத்ராத் மஹாதேவ – தேஹிமே வ்ரத விமோசனம்

## மாலை கழற்றும் பொழுது கூற வேண்டிய மந்திரம்

அபூர்வ மசலா ரோஹ – திவ்ய தர்சன காரணம்
சாஸ்த்ரு முத்ராத் மஹாதேவ – தேஹிமே வ்ரத விமோசனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
# நூற்றெட்டு சரணக்கோவை கோவை

மாலை அணிந்த ஸ்வாமிமார்கள் இந்த சரண கோஷத்தை தினமும் காலை,மாலை இரண்டு வேளையும் நீராடிவிட்டு ஐயப்பனிற்கு பால், பழம்,கற்கண்டு முதலியவற்றை நிவேதனம் செய்து சரணம் சொல்லி வழிபடவேண்டும்.

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச்சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப்பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினைகள் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எளியோர்க்கு அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எங்கள் குலதெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏழைப்பங்காளனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஏகாந்த மூர்த்தியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐங்கரன் தம்பியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஐயமெல்லாம் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒப்பில்லாத் திருமணியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | ஒளிரும் திருவிளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓங்காரப் பரம்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஓதும் மறைபொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஒளடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சௌபாக்கியம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கலியுகவரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவன்மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிவவைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அச்சங்கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குளத்துப்புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வீரமணிகண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சகலகலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சாந்தம்நிறை மெய்ப்பொருளே | சரணம்ஐயப்பா |
| ஓம் | குருமகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருதட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | புலிப்பாலை கொணர்ந்தவனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | துளசிமணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | இருமுடிப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | எருமேலி தர்மசாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம்ஐயப்பா |
| ஓம் | சாஸ்தாவின் நந்தவனமே | சரணம்ஐயப்பா |
| ஓம் | சாந்திதரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேரூத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காளைகட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அதிர்வேட்டுப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அழுதமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆனந்தமிகு பஜனைப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இஞ்சிப்பாறைக்கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரியிலந்தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஸ்ரீராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சக்திபூஜைக் கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீபஜோதித் திருஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | திருபம்பையின் புண்ணியமே | சரணம்ஐயப்பா |
| ஓம் | நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அப்பாச்சிமேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இப்பாச்சிக்குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சபரி பீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சரங்குத்தி ஆலே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உரல்குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கடுத்தசாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | கற்பூரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | நாகராஜாப் பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அலங்காரப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | சற்குருநாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மகரஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | மங்களமூர்த்தியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா
## ஸ்ரீ ஐயப்பன் கவசம் காப்பு

அரிஹர புத்திரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை ஆறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
அனுதினம் போற்றி பணிந்திடுவோமே
ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே.

### நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதர ஐயப்பா வருக 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக 2

பூத நாயகா வருக வருக
புஸ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக 4
ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனை யாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக 5

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடிபணிந்திடுமே 6

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே 7

பம்பைபியன் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் கள்எல்லாம் பணிந்தே வணங்குவார்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர் 8

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சத்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணண் பலன் நாசியைக் காக்க 10

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக்காக்க
பம்பையின் பாலன் பற்களைக் காக்க
நான்முகன் பூஜீயன் நாவினைக் காக்க 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஸ்களை நாதன் புஜங்களைக் காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையைக் காக்க 12

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
கயிலை மைந்தன் கைகளைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினை காக்க 13

முழுமுதற் கடவுள் என் முதுகினைக் காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினைக் காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க 16

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க 17

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடி ஈசன் இடப்புறம் காக்க 18

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க 19

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியை குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலை தனைக் கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் 20

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களைப் போக்கி அபயம் அளிப்பாய் 21


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா 22

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரிகிரீசா 23

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் ஐம்பெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் 24
சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோமம் துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் 25

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினமும் சொல்ல அருள் தருவாயே 26

## நமஸ்காரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ 27


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
கரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷிமர்த்தனா மணிகண்டா நமோ நமோ 28

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம் சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 29

## கறுப்பன் பாடல்

எங்க கருப்பசாமி – அவர் எங்க கருப்பசாமி
எங்க கருப்பசாமி – அவர் எங்க கருப்பசாமி
அக்னியில் பிறந்தவராம் அரனாரின் மைந்தன் அவன்
எங்க கருப்பசாமி – அவர் எங்க கருப்பசாமி
முக் கொண்டைக்காரன் அவர் முன்கோபக் காறனவன்
(எங்க கருப்ப)

சடைமுடி காரனவன் சாமிகளை காத்திடுவான்
சல்லடையை கட்டிவாறான் சாய்ந்த சாய்ந்ஆடிவாறான்
(எங்க கருப்ப)

வில்லுப்பாட்டு பாடி வாறான் விதவிதமாய்ஆடிவாறான்
பந்தம் கையில்பிடித்துவாறான்பாரிவேட்டைஆடிவாறான்
(எங்க கருப்ப)

அச்சங்கோயில் ஆண்டவர்க்கு எதிராக இருப்பவனாம்
18ஆம் படிகளுக்கு காவலாக இருப்பவனாம்
(எங்க கருப்ப)

கச்சைய கட்டி வாரான் கை அருவாள் காட்டி வாறான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசைசை முறுக்கிவாரான்முச்சந்தியில்நடந்துவாறான்

(எங்க கருப்ப)

வில்லாளி வீரனுக்கும், வீரமணி கண்டனுக்கும்
இருமுடி சுமக்குபோது பாதுகாக்க வருபவராம்

(எங்க கருப்ப)

கற்பூர ஆழிமுன்னே கடவுளாக இருந்திடுவார் கருப்பு வேஷ்டி
கட்டிக்கிட்டு பாவங்களை போக்கிடுவார்

(எங்க கருப்ப)

கருப்பன் வாரான் கருப்பன் வாரான் கருப்பசாமி –ஏ–கருப்பசாமி
கறுத்தமேகம் போலேவாரான் கருப்பசாமிஅண்ணன் வாரான்

தம்பிவாரான் கருப்பசாமி – ஏ கருப்பசாமி
விண்ணதிர மண்ணதிர கருப்பசாமி (கருப்பன்)

மலையாள தேசம்விட்டு கருப்பசாமி – ஏ... கருப்பசாமி
மாடன் மாடத்தியுடன் கறுப்பு சாமி
பிறந்தது எங்கே வளர்ந்தது எங்கே கறுப்பு சாமி
பேரும், ஊரும் சொல்லவரான் கருப்பசாமி (கருப்பன்)

வில்லுப்பாட்டு பாடிவாரான் கருப்பசாமி – ஏ கருப்பசாமி
விதவிதமாய் ஆடிவாரான் கருப்பசாமி
மந்தை வறந்தவண்டா கருப்பசாமி –ஏ–கருப்பசாமி
பூஜை கொண்டவண்டா கருப்பசாமி (கருப்பன்)

ஈன இசக்கியுடன் கருப்பசாமி – ஏ – கருப்பசாமி
எழுந்தோடி வாராண்டா கருப்பசாமி (கருப்பன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிநடைச் சரணம்

| | |
|---|---|
| சமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| சாமி சரணம் | ஐயப்ப சரணம் |
| ஐயப்ப சரணம் | சாமி சரணம் |
| பள்ளிக்கட்டு | சபரிமலைக்கு |
| சபரிமலைக்கு | பள்ளிக்கட்டு |
| கல்லும் முள்ளும் | காலுக்குமெத்தை |
| காலுக்கு மெத்தை | கல்லும் முள்ளும் |
| குன்றும் குளியும் | கண்ணுக்கு வெளிச்சம் |
| கண்ணுக்கு வெளிச்சம் | குன்றும் குளியும் |
| தேகபலம்தா | பாதபலம்தா |
| பாதபலம்தா | தேகபலம்தா |
| ஏற்றிவிடப்பா | துக்கிவிடப்பா |
| துக்கிவிடப்பா | ஏற்றிவிடப்பா |
| தாங்கிவிடப்பா | ஏந்தி விடப்பா |
| ஏந்தி விடப்பா | தாங்கிவிடப்பா |
| சாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சாமியே |
| பகவானே | பகவதியே |
| பகவதியே | பகவானே |
| ஈஸ்வரனே | ஈஸ்வரியே |
| ஈஸ்வரியே | ஈஸ்வரனே |
| சுவாமிமாரே | ஐயப்பமாரே |
| தேவன்மாரே | தேவிமாரே |
| சுவாமியே | ஐயப்போ |
| ஐயப்போ | சுவாமியோ |
| இருமுடிகட்டு | சபரிமலைக்கு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சபரிமலைக்கு | இருமுடிகட்டு |
| யாரைக்கான | சாமியைக்கான |
| சாமியைக்கண்டால் | மோட்சம்கிட்டும். |
| எப்போகிட்டும் | இப்போகிட்டும் |
| எங்கேகிட்டும் | இங்கேகிட்டும் |
| சாமி சாமி ஐயப்போ | சரணம் சரணம் ஐயப்போ |
| சரணம் சரணம் ஐயப்போ | சாமிசாமி ஐயோப்போ |
| சாமியப்பா | ஐயப்பா |
| சரணம்மப்பா | ஐயப்பா |
| வாரோம்மப்பா | ஐயப்பா |
| வந்தோமப்பா | ஐயப்பா |
| எங்களையப்பா | ஐயப்பா |
| எத்திவிடப்பா | ஐயப்பா |
| துக்கிவிடப்பா | ஐயப்பா |
| நாங்கள்ளப்பா | ஐயப்பா |
| ஏழைகளப்பா | ஐயப்பா |
| பால்அபிஷேகம் | சுவாமிக்கே |
| தேன்அபிஷேகம் | சுவாமிக்கே |
| நெய்அபிஷேகம் | சுவாமிக்கே |
| கற்பூரதீபம் | சுவாமிக்கே |
| முத்திரைத்தேங்காய் | சுவாமிக்கே |
| அவலும் மலரும் | சுவாமிக்கே |
| கதலிப்பழமும் | சுவாமிக்கே |
| காணிப்பொனும் | சுவாமிக்கே |
| கருடன்வருவது | சுவாமிக்கே |
| வில்லாளி வீரனே | வீரமணிகண்டனே |
| ராஜாதிராஜனே | ராஜகுமாரனே |
| பூலோகநாதனே | பூமிபிரபஞ்சனே |
| சுவாமியே | ஐயப்பா |
| மணிகண்டா | ஐயப்பா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மாமலைவாசா | ஐயப்பா |
| மோகினிசுதனே | ஐயப்பா |
| மோகனரூபா | ஐயப்பா |
| எங்களைக்காப்பாய் | ஐயப்பா |
| முன்னும் பின்னும் | ஐயப்பா |
| பின்னும் முன்னும் | ஐயப்பா |
| இடமும்வலமும் | ஐயப்பா |
| வலமும் இடமும் | ஐயப்பா |
| காத்துரட்சிக்கனும் | ஐயப்பா |
| ஓம் சுவாமியே சரணம் | ஐயப்பா |

## படிப்பாடல்கள்

ஒன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

இரண்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

மூன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

நான்காம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஆறாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஏழாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

எட்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

ஒன்பதாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பத்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினொன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பன்னிரெண்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்றாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினான்காம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினைந்தாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினாறாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினேழாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா

பதினெட்டாம் திருப்படி சரணம் பொன்ஐயப்பா
சாமி பொன்ஐயப்பா, என் ஐயனே பொன்ஐயப்பா
சுவாமிஇல்லாதொரு சரணம்மில் ஐயப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்தா பஞ்ச ரத்னம்

ஒவ்வொரு ஸ்லோகத்தையும் கூறி "ஸ்வாமியே சரணம் ஐயப்பா" என்று சொல்லி நமஸ்காரம் செய்ய வேண்டும்.

மூஷி வாகன மோதக ஹஸ்த
சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வாமனரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
ஓம் கன்னி மூல கணபதி
பகவானே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸூதம்
ஷிப்ர ப்ரசாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விகக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பஞ்சரத்னாத்யம் ஏதத்யோ
நித்ய சுத்தப்படேன் நரஹா!
தஸ்யப் பிரசன்னோ பகவான்
சஸ்தா வசதிமானசே!!
சுவாமியே சரணம் ஐயப்பா

ஓம் ஸ்ரீ பூத நாதா சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்த்ரேதுப்யம் நமோ நமஹ
சுவாமியே சரணம் ஐயப்பா

**(இறுதியாக 3 முறை சொல்வது சிறப்பாக அமையும்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அண்ணாமலை எம் அண்ணலே துணை

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதல் அருளிய பதிகம்

தேவாரம் (ஏழாம் திருமுறை)

# திருவெண்ணெய் நல்லூர்

திருச்சிற்றம்பலம்

பிதா பிறைசூடீ பெருமானே யருளாளா
எத்தால்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
அத்தாஉனக்(கு) ஆளாய்இனி அல்லேன்என லாமே.

நாயேன்பல நாளும் நினைப் பின்றிமனத் துன்னைப
பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற லாகா அருள் பெற்றேன்
வேயார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆயா உனக்(கு) ளோய் இனி அல்லேன் எனல் ஆமே.

மன்னேமற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னைப்
பொன்னேமணி தானேவயி ரம்மேபொரு துந்தி
மின்னார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
அன்னேஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

முடியேன்இனிப் பிறவேன்பெறின் மூவேன்பெற்றம் ஊர்தீ
கொடியேன்பல பொய்யேஉரைப் பேனைக்குறிக் கொள்நீ
செடியார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
அடிகேள்உனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதம்பணி வார்கள்பெறும் பண்டம்அது பணியாய்
ஆதன்பொருள் ஆனேன்அறி வில்லேன்அரு ளாளா
தாதார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆதீஉனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

தண்ணார்மதி சூடீதழல் போலும்திரு மேனீ
எண்ணார்புரம் மூன்றும்எரி உண்ணநகை செய்தாய்
மண்ணார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
அண்ணாவுனக் காளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

ஏற்றார்புரம் மூன்றும்எரி உண்ணச்சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித்திரி வேனோசெக்கர் வானீர்
ஏற்றாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆற்றாய்உனக்(கு) ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே.

மழுவாள்வலன் ஏந்தீமறை ஓதீமங்கை பங்கா
தொழுவார் அவர்துயர்ஆயின தீர்த்தல்உன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆனாய்உனக்(கு) ஆளாய்இனி அல்லேன்எனல் ஆமே.

காரூர்புனல்எய்திக்கரை கல்லித்திரைக் கையால்
பாரூர்புகழ் எய்தித்திகழ் பன்மாமணி உந்திச்
சீரூர்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆரூரன் எம் பெருமாற்காள் அல்லேன்எனல் ஆமே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தொண்டத்தொகை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 01

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க்கு அடியேன்
ஏனாதி நாதன்தன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க்கு அடியேன
கடவூரிற் கலையன்தன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 02

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திரபசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருகுறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு அடியேன் 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கு அரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க்கு அடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 04

வமபறா வரிவண்டு மணம்நாறா மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 05

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க்கு அடியேன்
கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 06

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தற்கு அடியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்ர்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 07

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்.
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றும் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 08

கடல்சூழ்ந்த உலலொம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 09

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோர்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசாரந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர்ஆ வாரே. 11

*இறுதியாக அருளிய பதிகம்*

## திருநொடித்தான்மலை

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனைவந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்தான்மலை உத்தமனே. 01

ஆனை உரித்த பகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர்வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்து அமரர் வலஞ்செய்துஎனை ஏறவைக்க
ஆனை அருள் புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 02

மந்திரம் ஒன்றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தர வேடங்களால் துரிசேசெயும் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில் அழகானை அருள்புரிந்த
துந்தர மோநெஞ்சமேநொடித்தான்மலை உத்தமனே. 03

வாழ்வை உகந்தநெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப்பட்டு
ஆழ முகந்தஎன்னை அதுமாற்றி அமரர்எல்லாம்
சூழ அருள்புரிந்து தொண்டனேன் பரம்அல்லதொரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுல கிற்பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுல கம்பெறுதல் தொண்டனேன்இன்று கண்டொழிந்தேன்
விண்ணுல கத்தவர்கள் விரும்பவெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே. 05

அஞ்சினை ஒன்றிநின்று அலர்கொண்டடி சேர்வறியா
வஞ்சனை என்மனமே வைகிவானநன் னாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றவித்துத் தொண்டனேன்பரம் அல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 06

நிலைகெட விண் அதிர நிலம்எங்கும் அதிர்ந்தசைய
மலையிடை யானை ஏறி வழியேவரு வேன்எதிரே
அலைகட லால்அரையன் அலர்கொண்டுமுன் வந்திறைஞ்ச
உலையணை யாதவண்ணம் நொடித்தான்மலை உத்தமனே. 07

அரவொலி ஆகமங்கள் அறிவார்அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்ணெலாம்வந்து எதிர்ந்திசைப்ப
வரமலி வாணன்வந்து வழிதந்தெனக்கு ஏறுவதோர்
சிரமலி யானைதந்தான் நொடித்தான்மலை உத்தமனே. 08

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ளஎன்னை மத்தயானை அருள் புரிந்து
மந்திர மாமுனிவர் இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரான்என்றான் நொடித்தான்மலை உத்தமனே. 09

ஊழிதோ றூழிமுற்றும் உயர்பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவைநாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன் தமிழால் இசைந்தேத்திய பத்தினையும்
ஆழி கடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே. 10

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருமந்திரம் 10ம் திருமுறை*

# ஐந்தாம் தந்திரம்

## சுத்த சைவம்

ஊரும் உலகமும் ஒக்கப்படைக்கின்ற
பேரறிவாளன் பெருமை குறித்திடின்
மேருவும் மூவுல காளி இலங்கெழும்
தாரணி நால்வகைச் சைவமும் ஆமே. 01

சத்தும் அசத்தும் சதசத்தும் தான் கண்டு
சித்தும் அசித்தும் சேர்வுறா மேநீத்த
சுத்தம் அசுத்தமும் தோய்வுறாமே நின்று
நித்தம் பரஞ்சுத்த சைவர்க்கு நேயமே. 02

கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோகம்
முற்பா ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரங் கண்டுளோர் சைவசித் தாத்தரே. 03

வேதாந்தம் சுத்தம் விளங்கிய சித்தர்தம்
நாதாந்தம் கண்டோர் நடுக்கற்ற காட்சியர்
பூதாந்த போதாந்த மாகப் புனஞ்செய்ய
நாதாந்த பூரணர் ஞானதே யத்தரே. 04

## அசுத்த சைவம்

இணையார் திருவடி ஏத்தும் சீரங்கத்து
இணையார் இணைக்குழை ஈரணை முத்திரை
குணமார் இணைக்கண்ட மாலையும் குன்றாது
அணைவாம் சரியை கிரியையி னார்க்கே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதுப்பொன் ஆர்த்த கடுக்கன் இரண்டுசேர்ந்து
ஓதும் திருமேனி உட்கட்டு இரண்டுடன்
சோதனை செய்து துவாதெச மார்க்கராய்
ஓதி இருப்பார் ஒரு சைவர் ஆகுமே. 02

கண்டங்கள் ஒன்பதும் கண்டவர் கண்டனர்
கண்டங்கள் ஒன்பதும் கண்டாய் அரும்பொருள்
கண்டங்கள் ஒன்பதும் கண்டவர் கண்டமாமம்
கண்டங்கள் கண்டோர் கடுஞ்சுத்த சைவரே. 03

ஞானி புவியெழு நன்னூல்அனைத்துடன்
மோன திசையும் முழுஎண் எண் சித்தியும்
ஏனை நிலமும் எழுதா மறைஈறும்
கோனொடு தன்னையும் காணும் குணத்தனே. 04

## மார்க்க சைவம்

பொன்னாற் சிவசாத னம்பூதி சாதனம்
நன்மார்க்க சாதனம் மாஞான சாதனம்
துன்மார்க்க சாதனம் தோன்றாத சாதனம்
சன்மார்க சாதன மாமம் சுத்த சைவர்க்கே. 01

கேடற ஞானி கிளர்ஞான பூபதி
பாடறு வேதாந்த சித்தாந்த பாகத்தின்
ஊடுறு ஞானோ தயனுண்மை முத்தியோன்
பாடு சுத்தசை வப்பத்த நித்தனே. 02

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேத முற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்மையொன்று
ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே. 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தம் அசுத்தம் துரியங்கள் ஓரேழும்
சத்தும் அசத்தும் தணந்த பராபரை
உய்த்த பராபரை யுள்ளம் பராபரை
அத்தன் அருட்சத்தி யாய்எங்கும் ஆமே. 04

சத்தும் அசத்தும் தணந்தவர் தானாகிச்
சித்தும் அசித்தும் தெரியாய் சிவோகமாய்
முத்தியுள் ஆனந்த சத்தியுள் மூழ்கினார்
சித்தியும் அங்கே சிறந்துள தானே. 05

தன்னைப் பரனைச் சதாசிவன் என்கின்ற
மன்னைப் பதிபசு பாசத்தை மாசற்ற
முன்னைப் பழமல முன்கட்டை வீட்டினை
உன்னத் தகுஞ்சுத்த சைவர் உபாயமே. 06

பூரணம் தன்னிலே வைத்தற்ற அப்போதம்
ஆரணம் அந்தம் மதித்து ஆனந் தத்தோடு
நேரென ஈராறு நீதி நெடும் போகம்
காரண மாம்சுத்த சைவர்க்குக் காட்சியே 07

மாறாத ஞான மதிப்பற மாயோகம்
தேறாத சிந்தையைத் தேற்றிச் சிவமாக்கிப்
பேறான பாவனை பேணி நெறி நிற்றல்
கூறாகு ஞானி சரிதை குறிக்கிலே. 08

வேதாந்தங் கண்டோர் பிரமமித் தியாதரர்
நாதாந்தங் கண்டோர் நடுக்கற்ற யோகிகள்
தோந்தம் அல்லாத சித்தாந்தங் கண்டுளோர்
சாதா ரணமன்ன சைவர் உபாயமே. 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணினைச் சென்றணு காவியன் மேகங்கள்
கண்ணினைச் சென்றணு காப்பல காட்சிகள்
எண்ணினைச் சென்றணு காமல் எணப்படும்
அண்ணலைச் சென்றணு காபசு பாசமே. 10

ஒன்றும் இரண்டும் இலதுமாய் ஒன்றாக
நின்று சமய நிராகார நீங்கியே
நின்று பராபரை நேயத்தைப் பாதத்தால்
சென்று சிவமாதல் சித்தாந்த சித்தியே. 11

## கடுஞ் சுத்த சைவம்

வேடம் கடந்து விகிர்தன் தன் பால்மேவி
ஆடம் பரமின்றி ஆசாபா சம்செற்றுப்
பாடொன்று பாசம் பசுத்துவம் பாழ்படச்
சாடும் சிவபோ தகர்சுத்த சைவரே. 01

உடலான ஐந்தையும் ஓராறும் ஐந்து
மடலான மாமாயை மற்றுள்ள நீவப்
படலான கேவல பாசந் துடைத்துத்
திடமாய்த் தனையுறல் சித்தாந்த மார்க்கமே. 02

சுத்தச் சிவனுமறை தானதில் தோயாமல்
முத்தர் பதப்பெருள் முத்திவித் தாமூலம்
அத்தகைய ஆன்மா அரனை அடந்தற்றால்
சுத்த சிவமாவ ரேசுத்த சைவரே. 03

நான் என்றும் தான்என்றும் நாடிநான் சாரவே
தான் என்று நான் என்று இரண்டிலாத் தற்பதம்
தான் என்று நான்என்ற தத்துவம் நல்கலால்
தான் என்றும் நான்என்றும் சாற்றகில் லேனே. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாற்றரி தாகிய தத்ததுவம் சித்தித்தால்
ஆற்றரி தாகிய ஐந்தும் அடங்பகிடும்
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே. 05

## சரியை

நேர்ந்திடு மூல சரியை நெறியிதென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்த்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சத்த சைவத்து உயிரதே. 01

உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்குஒளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறும் ஆவாகனம்புறப் பூசை
செயிற்கடை நேசம் சிவபூசை யாமே. 02

நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. 03

பத்தர் சரிதை பாடுவோர் கிரியையோர்
அத்தகு தொண்டர் அருள்வேடத்து ஆகுவோர்
சுத்த இயமாதி சாதகர் தூயோகர்
சித்தர் சிவஞானம் சென்றெய்து வோர்களே. 04

சார்ந்தமெய்ஞ் ஞானத்தோர் தானவர் ஆயினோர்
சேர்ந்தவெண் யோகத்தர் சித்தர் சமாதியோர்
ஆய்ந்த கிரியையோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த சிரியையோர் நீள்நிலத்தோரே. 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை யோகங்கங் கிளர்ஞான பூசை
அரிய சிவனுரு அமரும் அரூபத்
தெரியும் பருவத்துத் தேர்ந்திடும் பூசை
உரியன நேயத்து உயர்பூசை யாமே. 06

சரியாதி நான்கும் தருஞானம் நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்தம் ஆறும்
பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து
மருளாகும் மாந்தர் வணங்கவைத் தானே. 07

சமையம் பலசுத்தித் தன்செயல் அற்றிடும்
அமையும் விசேடமும் அரன்மந் திரசத்தி
சமைய நிருவாணம் கலாசுத்தி யாகும்
அமைமன்னு ஞமானமார்க் கம் அபி டேகமே. 08

## கிரியை

பத்துதத் திசையும் பரமொரு தெய்வமுண்டு
எத்திக்கு இலர் இல்லை என்பதின் அமலர்க்கு
ஒத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைகடல் சாராது காணுமே. 01

கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுறு மாமலர் இட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி உண்பவர்க்கு அல்லது
தேனமர் பூங்கழல் சேரஒண் ணாதே. 02

கோனக்கன் தாயே குரைகழல் ஏத்துமின்
ஞானக்கன் றாகிய நடுவே உழிதரும்
வானக்கன் றாகிய வானவர் கைதொழும்
மானக்கன்று ஈசன் அருள்வள்ள மாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபணிந்து எண்டிசை மண்டலம் எல்லாம்
அதுபணி செய்கின் றவள்ஒரு கூறன்
இதுபணி மானுடர் செய்பணி ஈசன்
இதுபணி செய்வது பத்திமை காணே. 04

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் தரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குருவரு ளால் சிவம் ஆகுமே. 05

அன்பின் உருகுவன் நாளும் பணிசெய்வன்
செம்பொன் செய்மேனி கமலத் திருவடி திவடி
முன்புநின் றாங்கே மொழிவது எனக்கருள்
என்பினுள் சோதி இலக்குகின் றானே. 06

## யோகம்

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினும் தாக்கினும் துண்ணென் றுணராக்
குறியறி வாளார்க்குக் கூடலும் ஆமே. 01

ஊழிதோ றூழி உணர்ந்தவர்க்கு அல்லால்
ஊழிதோ றூழி உணரவும் தானொட்டான்
ஆழி அமரும் அரிஅயன் என்றுளார்
ஊழி முயன்றும்ஓர் உச்சியு ளானே. 02

பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக்கு உள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளார்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்ந்தனம் என்பீர் உறுபொருள் காண்கிலீர்
கந்த மலரில் கலக்கின்ற நந்தியைச்
சிந்தை யுறவே தெளிந்திருள் நீங்கினால்
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே. 04

எழுத்தொடு பாடலும் எண்ணெண் கலையும்
பழித்தலைப் பாசப் பிறவியும் நீங்கா
வழித்தலைச் சோமனோடு அங்கி அருக்கன்
வழித்தலைச் செய்யும் வகையுணர்ந் தேனே. 05

விரும்மிநின் றேசெய்யில் மேய்த்தவ ராகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்யுரை யாகும்
விரும்பிநின் றேசெய்யின் மெய்த்தவ மாகும்
விரும்பிநின் றேசெய்யில் விண்ணவன் ஆகுமே. 06

பேணிற் பிறவா உலகருள் செய்திடும்
காணில் தனது கலவியு ளேநிற்கும்
நாணில் நரக நெறிக்கே வழிசெயும்
ஊனில் சுடும் அங்கி உத்தமன் தானே. 07

ஒத்தசெங் கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை ஆயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்தன் இவன்என்றே அன்புறு வார்களே. 08

யோகிக்கு யோகாதி மூன்றுள கொண்டுற்றோர்
ஆகத் தகுகிரி யாதி சரியையாம்
தாகத்தை விட்ட சரியையொன் றாம்ஒன்றுள்
ஆதித்தன் பத்தியுள் அன்புவைத் தேனே. 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகச் சமயமே யோகம் பலவுன்னல்
யே விசேடமே அட்டாங்க யோகமாம்
யோகநிர் வாணமே உற்ற பரோதயம்
யோகஅபி டேகமே ஒண்சித்தி யுற்றலே. 10

## ஞானம்

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே 01

சத்தமும் சத்த மனனும் தகுமனம்
உய்த்த உணர்வும் உணர்த்தும் அகந்தையும்
சித்தம் என்று இம்மூன்றும் சிந்திக்கும் செய்கையும்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே. 02

தன்பால் உலகும் தனக்கஅரு காவதும்
அன்பால் எனக்குஅரு ளாவது மாவன
என்பார்கள் ஞானமும் எய்தும் சிவலோகமும்
பின்பாலின் நேயமும் பெற்றிடுந் தானே. 03

இருக்கும் சேம இடம்பிரம மாகும்
வருக்கம் சராசர மாகும் உலகம்
தருக்கிய ஆசாரம் எல்லாம் தருமே
திருக்கமில் ஞானத்தைத் தேர்ந்துணர்ந் தோர்க்கே. 04

அறிவும் அடக்கமுமும் அன்பும் உடனே
பிறியா நகர்மன்னும் பேரரு ளாளன்
குறியும் குணமும் குரைகழல் நீங்கா
நெறியறி வார்க்கிது நீர்த்தொனி யாமே. 05


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் வியைந்தெழு கின்றதோர் சிந்தையுள்
ஏனம் விளைந்தெதி ரேகாண் வழிதொறும்
கூனல் மதிமண்டலத்தெதிர் நீர்கண்டு
ஊனம் அறுத்துநின்று ஒண்சுடர் ஆகுமே. 06

ஞானிக்கு உடன்குணம் ஞானத்தில் நான்குமாம்
மோனிக்கு இவை ஒன்றும் கூடாமன் மோகித்து
மேனிற்ற லாம்சத்தி வித்தை விளைத்திடும்
தானிக் குலத்தோர் சரியை கிரியையே. 07

ஞானத்தின் ஞானாதி நான்குமாம் ஞானிக்கு
ஞானத்தின் ஞானமே நான்எனது என்னாமல்
ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி
ஞானக் கிரியையே நன்முத்தி நாடலே. 08

நண்ணிய ஞானத்தின் ஞானதி நண்ணுவோன்
புண்ணிய பாவம் கடந்த பிணக்கற்றோன்
கண்ணிய நேயம் கரைஞானம் கண்டுளோன்
திண்ணிய சுத்தன் சிவமுத்தன் சித்தனே. 09

ஞானச் சமயமே நாடும் தனைக் காண்டல்
ஞான விசேடமே நாடு பரோதயம்
ஞானநிர் வாணமே நன்றறி வான்அருள்
ஞானஅபி டேகமே நற்குரு பாதமே. 10

## சன்மார்க்கம்

சாற்றும்சன் மார்க்கமாம் தற்சிவத் தத்துவத்
தோற்றங்க ளான சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவயோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே. 01


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெருமைத் தனிநா யகன்நந்தி
உய்ய வகுத்த குருநெறி ஒன்றுண்டு
தெய்வச் சிவநெறி நன்மார்க்கம் சேர்ந்துய்ய
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத்தானே. 02

தெரிசிக்கப் பூசிக்கச் சிந்தனை செய்யப்
பரிசிக்கக் கீர்த்க்கப் பாதுகஞ் சூடக்
குருபத்தி செய்யும் குவலயத் தோர்க்குத்
தருமுத்திச் சார்பூட்டும் சன்மார்க்கம் தானே. 03

தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவறி யாதார் சீவனும் ஆகார்
தெளிவறியாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதார் தீரார் பிறப்பே. 04

தான்அவ னாகித் தான்ஐந்தாம் மலம்செற்று
மோனம தாம்மொழிப் பால்முத்த ராவதும்
ஈனமில் ஞானனு பூதியில் இன்பமும்
தான்அவ னாய்அற்ற லானசன் மார்க்கமே. 05

சன்மார்க்கத் தார்க்கு முகத்தொடு பீடமும்
சன்மார்க்கத் தார்க்கும் இடத்தொடு தெய்வமும்
சன்மார்க்கத் தார்க்கு வருக்கம் தரிசனம்
எம்மார்க்கத் தார்க்கும் இயம்புவன் கேண்மினோ 06

சன்மார்க்க சாதனம் தான்ஞான ஞேயமாம்
பின்மார்க்க சாதனம்பேதையர்க் காய்நிற்கும்
துன்மார்க்கம் விட்ட துரியத் தரிசற்றார்
சன்மார்க்கம் தான்அவ னாகும்சன் மார்க்கமே. 07


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மார்க்கம் எய்த வரும்அருஞ் சீடர்க்குப்
பின்மார்க்கம் மூன்றும் பெஇயல் பாம்என்றால்
நன்மார்க்கம் தானே சிவனொடு நாடலே
சொன்மார்க்கம் என்ன சுருதிகைக் கொள்ளுமே. 08

அன்னிய பாசமும் ஆகும் கருமமும்
முன்னும் அவத்தையும் மூலப் பகுதியும்
பின்னிய ஞானமும் பேதாதி பேதமும்
தன்னொடும் கண்டவர் சன்மார்க்கத் தோரே. 09

பசுபாசம் நீங்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சம் கசியக் கசிவித்து
ஒசியாத உண்மைச் சொருபஉ தயத்துற்று
அசைவானது இல்லாமை யானசன் மார்க்கமே. 10

மார்க்கம்சன் மார்க்கிகள் கிட்ட வகுப்பது
மார்க்கம்சன் மார்க்கமே யன்றிமற்று ஒன்றில்லை
மார்க்கம்சன் மார்க்க மெனம்நெறி வைகாதோர்
மார்க்கம்சன் மார்க்க மாம்சித்த யோகமே. 11

## சக மார்க்கம்

சன்மார்க்கம் தானே சகமார்க்க மானது
மன்மார்க்க மாமுத்தி சித்திக்குள் வைப்பதாம்
பின்மார்க்க மானது பேராப் பிறந்தஇறந்து
உன்மார்க்க ஞானத்து உறுதியும் ஆமே. 01

மருவும் துவாதச மார்க்கம்இல் லாதார்
குருவும் சிவனும் சமயமும் கூடார்
வெருவும் திருமகள் வீட்டில்லை யாகும்
உருவும் கிளையும் ஒருங்குஇழப் பாரே. 02


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யோகச் சமாதியின் உள்ளே அகலிடம்
யோகச் சமாதியின் உள்ளே உளரொளி
யோகச் சமாதியின் உள்ளே உள சத்தி
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே. 03

யோகமும் போகமும் யோகியர்க்கு ஆகுமால்
யோகம் சிவரூபம் உற்றிடும் உள்ளத்தோர்
ஆகும் புவியில் புருடார்த்த சித்தியது
ஆகும் இரண்டும் அழியாத யோகிக்கே. 04

ஆதார தேனை யால் யால்நாடி சுத்திகள்
மேதாதி ஈரெண் கலாந்தத்து விண்ணொளி
போதலயத்துப் புலன்கர ணம்புந்தி
சாதா ரணங்கெடல் ஆம்சக மார்க்கமே. 05

பிணங்கிநிற் கின்றவை ஐந்தையும் பின்னை
அணங்கி எறிவன் அயிர்மன வாளால்
கணம்பதி னெட்டும் கருதும் ஒருவன்
வணங்கவல் லான்சிந்தை வந்துநின் றானெ. 06

வளங்கனி யொக்கும் வள நிறத் தார்க்கும்
வளங்கனி யொப்பதோர் வாய்மையன் ஆகும்
உளங்கனிந்து உள்ளம் உகந்திருப் பார்க்குப்
பழங்கனிந்து உள்ளெ பகுந்துநின் றானே. 07

## சற்புத்திர மார்க்கம்

மேவிய சற்புத்திர மார்க்கம் மெய்த்தொழில்
தாவிப்ப தாம்சக மார்க்கம் சகத்தொழில்
ஆவ திரண்டும் அகன்று சகமார்க்கத்
தேவியோடு ஒன்றல் சன்மார்க்கத் தெளிவதே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை
நேசித்திட்டு அன்னமும் நீசுத்தி செயதல்மற்று
ஆசற்ற சற்புத் திரமார்க்கம் ஆகுமே. 02

அறுகால் பறவை அலர்தேர்ந்து உழலும்
மறுகா நரையன்னம் தாமரை நீலம்
குறுகா நறுமலர் கொய்வன கண்டும்
சிறுகால் அறநெறி சேரகி லாரே. 03

அருங்கரை யாவது அவ்வடி நீழல்
பெருங்கரை யாவது பிஞ்ஞகன் ஆணை
வருங்கரை ஏகின்ற மன்னுயிர்க்கு எல்லாம்
ஒருங்குஅரை யாய்உல கேழின்ஒத் மதானே 04

உயர்த்தும் பணிந்தும் முகந்தும் தழுவி
வியந்தும் அரனடிக் கேமுறை செய்மின்
பயந்தும் பிறவிப் பயனது வாகும்
பயந்து பிரிக்கில்அப் பான்மையன் ஆமே. 05

நின்று தொழுவன் கிடந்தெம் பிரான் தன்னை
என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்துவித் தொழுமின் தொழுந்தோறும்
சென்று வெளிப்படும் தேவர் பிரானே. 06

திருமன்னும் சற்புத்திர மார்க்கச் சரியை
உருமன்னி வாழும் உலகத்தீர் கேண்மின்
கருமன்னு பாசம் கைகூம்பத் தொழுது
இருமன்னு நாடோறும் இன்புற்று இருந்தே. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாசமார்க்கம்

எளியனல் தீபம் இடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுகல் அததூர்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்தாச மார்க்கமே. 01

அதுஇது ஆதிப் பரம்என்று அகல்வர்
இது வழி என்றங்கு இறைஞ்சினர் இல்லை
விதிவழி யேசென்று வேந்தனை நாடும்
அதுஇது நெஞ்சில் தணிக்கின்ற வாறே 02

அந்திப்பன் திங்கள் அதன்பின்பு ஞாயிறு
சிந்திப்ப்ன் என்றும் ஒருவன் செறிகழல்
வந்திப்பன் வானவர் தேவனை நாடோறும்
வந்திப்பது எல்லாம் வகையின் முடிந்ததே. 03

அண்ணலை வானவர் ஆயிரம் பேர்சொல்லி
உன்னுவர் உள்மகிழ்ந்து உள்நின்று அடிதொழக்
கண்ணவன் என்று கருதும் அவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றிநின் றானே. 04

வாசித்தும் பூசித்தும் மாமலர் கொய்திட்டும்
பாசிக் குளத்தில்வீழ் கல்லாம் மனம்பார்க்கின்
மாசற்ற சோதி மணிமிடற்று அண்ணலை
நேசத் திருந்த நினைவுஅறி யாரே. 05

## சாலோகம்

சாலோகம் ஆதி சரியாதி யிற்பெறும்
சாலோகம் சாமீபம் தங்கும் சரியையால்
மாபேலகம் சேரில் வழியாகும் சாரூபம்
பாலேகம் இல்லாப் பரன்உரு வாமே. 01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம் கிரியையில் தன்மனம் கோயில்
சமய மனுமுறை தானே விசேடம்
சமயத்து மூலம் தனைத்தேறல் மூன்றாம்
சமயாபி டேகம் தானாம் சமாதியே. 02

## சாமீபம்

பாசம் பசுவான தாகும்இச் சாலோகம்
பாசம் அருளான தாகும் இச் சாமீபம்
பாசம் சிரமான தாகும் இச் சாரூபம்
பாசம் கரைபதி சாயுச் சியமே. 01

## சாரூபம்

தங்கிய சாரூபம் தானெட்டாம் யோகமாம்
தங்கும் சன்மார்க்கம் தனில்அன்றிக் கைகூடா
அங்கத் துடல்சித்தி சாதனர் ஆகுவர்
இங்கிவ ராக விழிவற்ற யோகமே. 01

சயிலலோ கத்தினைச் சார்ந்த பொழுதே
சயிலம தாகும் சராசரம் போலப்
பயிலும் குருவின் பதிபுக்க போதே
கயிலை இறைவன் கதிர்வடி வாமே. 02

## சாயுச்சியம்

சைவம் சிவனுடன் சம்பந்த மாகுதல்
சைவம் தனையறிந் தேசிவம் சாருதல்
சைவம் சிவம்தன்னைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச் சியமே. 01

சாயுச் சியம்சாக் கிராதீதம் சாருதல்
சாயுச் சியம்உப சாந்தத்துத் தங்குதல்
சாயுச் சியம்சிவ மாதல் முடிவிலாச்
சாயுச் சியமனத்து அனந்த சத்தியே. 02


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தி நிபாதம்

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துத்
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம்புரிந் தாளே. 01

தீம்புல னான திசையது சிந்திக்கில்
ஆம்புல னாயறி வார்க்குஅமு தாய்நிற்கும்
தேம்புல னான தெளிவறி வார்கட்குக்
கோம்புல னாடிய கொல்லையு மாமே. 02

இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே ஆதி அருளும்
மருள்நீங்கா வானவர் கோனொடுங் கூடிப்
பொருள்நீங்கா இன்பம் புலம்பயில் தானே. 03

இருள்சூழ் அறையில் இருந்தது நாடில்
பொருள்சூழ் விளக்கது புக்கெரிந் தாற்போல்
மருள்சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
அருள்சூழ் இறைவனும் அம்மையும் ஆமே. 04

மருட்டிப் புணர்ந்து மயக்கமும் நீக்கி
வெருட்டி வினையறுத்து இன்பம் விளைந்து
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
அருள்திகழ் ஞானம் அதுபுரிந் தானே. 05

கன்னித் துறைபடிந்து ஆடிய ஆடவர்
கன்னித் துறைபடிந்நு ஆடுங் கருத்திலர்
கன்னித் துறை படிந்து ஆடுங் கருத்துண்டேல்
பின்னைப் பிறவி பிறிதில்லை தானே. 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யன் கரியன் வெளியன்நற் பச்சையன்
எய்த உணர்ந்தவர் எய்வர் இறைவனை
மைவென்று அகன்ற பகடுரி போர்த்தவெங்
கையன் சிவனென்று காதல்செய்வீரே 07

எய்திய காலங்கள் எத்தனை யாயினும்
தையலும் தானும் தனிநா யகம்என்பர்
வைகலும் தன்னை வணங்கும் அவர்கட்குக்
கையிற் கருமம்செய் காட்டது வாமே. 08

கண்டுகொண் டோம்இரண் டும்தொடர்ந்து ஆங்கொளி
பண்டுபண்டு ஓயும் பரமன் பரஞ்சுடர்
வண்டுகொண் டாடும் மலர்வார் சடையண்ணல்
நின்றுகண் டார்க்கிருள் நீங்கிநின் றானே. 09

அண்ணிக்கும் பெண்பிள்ளை அப்பனார் தோட்டத்தில்
எண்ணிக்கும் ஏழேழ் பிறவி யுணர்விக்கும்
உள்நிற்ப தெல்லாம் ஒழிய முதல்வனைக்
கண்ணுற்று நின்ற கனியது வாகுமே. 10

பிறப்பை அறுக்கும் பெருந்தவம் நல்கும்
மறப்பை யறுக்கும் வழிபட வைக்கும்
குறப்பெண் குவிமுலை கோமள வல்லி
சிறப்பொடு பூசனை செய்யநின் றார்க்கே. 11

தாங்குமின் எட்டுத் திசைக்கும் தலைமகன்
பூங்கமழ் கோதைப் பரிகுழ லாளொடும்
ஆங்கது சேரும் அறிவுடை யார்கட்குத்
தூங்கொளி நீலம் தொதர்தலும் ஆமே. 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நணுகினும் ஞானக் கொழுந்தொன்று நல்கும்
பணிகிலும் பன்மலர் தூவிப் பணிவன்
அணுகியது ஒன்றறி யாத ஒருவன்
அணுகும் உலகெங்கும் ஆவியும் ஆமே. 13

இருவினை நேரொப்பில் இன்னருள் சத்தி
குருவென வந்து குணம்பல நீங்கித்
தருமெனும் ஞானத்தால் தன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவன் ஆமே. 14

இரவும் பகலும் இலாத இடத்தே
குரவம் செய்கின்ற குழலியை உன்னி
அரவம்செய் யாமல் அவளுடன் சேரப்
பரிவொன்றி லாம் பராபரை தானே. 15

மாலை விளக்கும் மதியமும் ஞாயிறும்
சாலை விளக்கும் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்து
ஊனை விளக்கி உடனிருந் தானே 16





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காம் தந்திரம் (திருமந்திரம் 10ம் திருமுறை)

## அர்ச்சனை

அம்புயம் நீலம் கழுநீர் அணி நெய்தல்
வம்பவீழ் பூகமும் மாதவி மந்தாரம்
தும்பை வகுளம் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே 01

சாங்கம தாகவே சந்தொடு சந்தனம்
தேங்கமழ் குங்குமம் கர்ப்பூரம் காரகில்
பாங்கு படப்பனி நீரால் குழைத்து வைத்து
ஆங்கே அணிந்து நீர் அர்ச்சியும் அன்பொடே 02

அன்புடனே நின்று அமுதமும் ஏற்றியே
பொன் செய் விளக்கும் புகை தீபம் திசைதொறும்
துன்பம் அகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்புட னேவந்து எய்திடும் முத்தியே. 03

எய்தி வழிப்படில் எய்தா தனஇல்லை
எய்தி வழிப்படில் இந்திரன் செல்வமும்
எய்தி வழிப்படில் எண்சித்தி உண்டாகும்
எய்தி வழிப்படில் எய்திடும் முத்தியே 04

நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத் தியம்அனு சந்தானம்
நண்ணிய பஞ்சாங்கம் நண்ணும் செபமென்னும்
மன்னும் மனபவ னத்தொடு வைகுமே. 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டார்கள் கன்மம் விமலனுக்கு ஆட்பட்டோர்
வேண்டார்கள் கன்மம் அதில்இச்சை அற்றபேர்
வேண்டார்கள் கன்மம் மிகுசிவ யோகிகள்
வேண்டார்கள் கன்மம் மிகுதியோர் ஆய்ந்தன்பே. 05

அறிவரு ஞானத்து எவரும் அறியார்
பொறிவழி தேடிப் புலம்புகின் றார்கள்
நெறிமனை யுள்ளே நிலைபெற நோக்கில்
எறிமணி யுள்ளே இருக்கலும் ஆமே. 06

இருளும் வெளியும்போல் இரண்டாம் இதயம்
அருள்அறி யாமையும் மன்னும் அறிவு
மருளிவை விட்டறி யாமை மயங்கும்
மருளும் சிதைத்தோர் அவர்களாம் அன்றே. 07

தான்அவனாக அவனேதான் ஆயிட
ஆன இரண்டில் அறிவன் சிவமாகப்
போனவன் அன்பிது நாலாம் மரபுறத்
தான்அவன் ஆகும்ஓ ராசித்த தேவரே. 08

நமவது ஆசனம் ஆன பசுவே
சிவமது சித்திச் சிவமாம் பதியே
நமவற ஆதி நாடுவது அன்றாம்
சிவமாகும் மாமோனம் தேர்தல்மெய் வீடே. 09

தெளிவரு நாளில் சிவஅமுது ஊறும்
ஒளிவரு நாளில் ஓர் ஏட்டில் உகளும்
ஒளிவரும் அப்பதத்து ஓர் இரண்டு ஆகில்
வெளிதரு நாதன் வெளியாய் இருந்தே. 10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகுண்டம் ஆனவை நான்உரை செய்யின்
நவகுண்டத்து உள்ளெழும் நற்றீபம் தானும்
நவகுண்டத்து உள்ளெழும் நன்மைகள் எல்லாம்
நவகுண்டம் ஆனவை நான்உறைப் பேனே. 11

உரைத்திடும் குண்டத்தின் உள்ளே முக்காலும்
நகைத்தெழு நாள்கோணம் நன்மை கள்ஐந்தும்
பகைத்திடு முப்புரம் பாரங்கி யோடே
மிகைத்தெழு கண்டங்கள் மேலறி யோமே. 12

மேலறிந்து உள்ளே வெளி செய்த அப்பொருள்
கால்அறிந்து உள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பார்அறிந்து அண்டம் சிறகற நின்றது
நான்அறிந்து உள்ளே நாடிக்கொண்டேனே. 13

கொண்டஇக் குண்டத்தின் உள்ளெழு சோதியாய்
அண்டங்கள் ஈரேழும் ஆக்கி அழிக்கலாம்
பண்டையுள் வேதம் பரந்த பரப்பெலாம்
இன்றுசொல் நூலாய் எடுத்துரைத் தேனே. 14

எடுத்தஅக் குண்டத் திடம்பதி னாறில்
பதித்த கலைகளும் பாலித்து நிற்கும்
கதித்தனல் உள்ளெழக் கண்டுகொள் வார்க்கே
கொதித்தெழும் வல்வினை கூடகி லாவே. 15

கூடமுக் கூடத்தின் உள்ளெழு குண்டத்துள்
ஆடிய ஐந்தும் அகம்புறம் பாய்நிற்கும்
பாடிய பன்னீர் இராசியும் அங்குளழ
நாடிக்கொள் வார்கட்கு நற்சுடர் தானே. 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்சுட ராகும் சிரமுக வட்டமாம்
கைச்சுட ராகும் கருத்துற்ற கைகளிற்
பைச்சடர் மேனி பதைப்புற்று இலிங்கமும்
நற்சுட ராய்எழு நல்லதென் றாளே. 17

நல்லதென் றாளே நமக்குற்ற நாயகம்
சொல்லதென் றாளே சுடர்முடி பாதமா
மெல்லநின் றாளை வினவகில் லாதவர்
கல்லதன் றாளையும் கற்றும் வின்னாளே. 18

வின்னாஇ ளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னால் இரண்டும் சுடர்நாகம் திக்கெங்கும்
பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என்ஆகத் துள்ளே இடங்கொண்டவாறே. 19

இடங்கொண்ட பாதம் எழிற்சுடர் ஏக
நடங்கொண்ட பாதங்கள் நண்ணீர் அதற்குச்
சகங்கொண்ட கையிரண்டு ஆறும் தழைப்ப
முகங்கொண்ட செஞ்சுடர் முக்கண னார்க்கே. 20

முக்கணன் தானே முழுச்சுடர் ஆயவன்
அக்கணன் தானே அகிலமும் உண்டவன்
திக்கணன் ஆகித் திகைஎட்டும் கண்டவன்
எக்கணன் தானுக்கும் எந்தை பிரானே. 21

எந்தை பிரானுக்கு இருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகம் தோன்றலால்
கந்தன் சுவாமி கலந்தங்கு இருத்தலான்
மைந்தன் அவனென்று மாட்டிக்கொள் ளீரே. 22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டிய குண்டத்தின் உள்ளெழு வேதத்துள்
ஆட்டிய காலொன்று இரண்டும் அலர்ந்திடும்
வாட்டிய கைணிரண்டு ஒறன்று பதைத்தெழு
நாட்டும் சுரறிவர் நல்லொளி தானே. 23

நல்லொளி யாக நடந்துல கெங்கும்
கல்லொளி யாகக் கலந்துள் இருந்திடும்
சொல்லொளி யாகத் தொடர்ந்த உயிர்க்கெலாம்
கல்லொளி கண்ணுளு மாகிநின் றாளே. 24

நின்றஇக் குண்டம் நிலையாறு கோணமாய்ப்
பண்டையில் வட்டம் பதைத்தெழு மாறாறும்
கொண்டஇத் தத்துவம் உள்ளே கலந்தெழ
விண்ணுளும் என்ன எடுக்கலு மாமே. 25

எடுக்கின்ற பாதங்கள் மூன்றது எழுத்தைக்
கடுத்த முகம்இரண்டு ஆறுகண் ஆகப்
படுத்தஎண்ணும் நாவெழு கொம்பொரு நாலும்
அடுத்தெழு கண்ணானது அந்தமி லாற்கே. 26

அந்தமில் லானுக்கு அகலிடம் தானில்லை
அந்தமில் லானை அளப்பவர் தாமில்லை
அந்தமில் லானுக்கு அடுத்சொல் தானில்லை
அந்தமில் லானை அறிந்துகொள் பத்தே. 27

பத்திட்டுஅங்கு எட்டிட்ட ஆறிட்டு நாலிட்டு
மட்டிட்டு குண்டம் மலர்தெழு தாமரை
கட்டிட்டு நின்று கலந்தமெய் யாகமும்
பட்டிட்டு நின்றது பார்ப்பதி பாலே. 28


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதி பாகன் பரந்தகை நால்ஐஞ்சு
காற்பதி பத்து முகம்பத்துக் கண்களும்
பூப்பதி பாதம் இரண்டு சுடர்முடி
நாற்பது சோத்திரம் நல்லிரு பத்தஞ்சே. 29

அஞ்சிட்ட கோலம் அளப்பன ஐஐந்தும்
மஞ்சிட்ட குண்டம் மலர்ந்தங்கு இருத்தலால்
பஞ்சிட்ட சோதி பரந்த பரஞ்சுடர்
கொஞ்சிட்ட வன்னியைக் கூடுதல் முத்தியே. 30

முத்திநற் சோதி முழுச்சுடர் ஆயவன்
கற்றற்று நின்றார் கருத்துள் இருந்திடும்
பற்றற நாடிப் பரந்தொளி யூடு போய்ச்
செற்றற்று இருந்தவர் சேர்ந்திருந் தாரே. 31

சேர்ந்த கலையஞ்சும் சேரும்இக் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்தஐம் பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே. 32

மெய்கண்ட மாம்விரி நீர்உலகு ஏழையும்
உய்கண்டம் செய்த ஒருவனைச் சேருமின்
செய்கண்ட ஞானம் திருந்திய தேவர்கள்
பொய்கண்டம் இல்லாப் பொருள்கலந் தாரே. 33

கலந்திரு பாதம் இருகர மாகும்
மலர்ந்திரு குண்ட மகாரத்தார் மூக்கு
மலர்ந்தெழு செம்முகம் மற்றைக்கண் நெற்றி
உணர்ந்திரு குஞ்சிஅங்கு உத்தம னார்க்கே. 34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமன் சோதி உளனொரு பாலனாய்
மத்திம னாகி மலர்ந்தங்கு இருந்திடும்
பச்சிம திக்கும் பரந்து குழிந்தன
சத்திமா னாகத் தழைத்த கொடியே. 35

கொடியாறு சென்று குலாவிய குண்டம்
அடியிரு கோணமாய் அந்தமும் ஒக்கும்
படிஏழ் உலகும் பரந்த சுடரை
மடியாது கண்டவர் மாதன மாமே. 36

மாதன மாக வளர்கின்ற வன்னியைச்
சாதன மாகச் சமைந்த குருவென்று
போதன மாகப் பொருந்த உலகாளும்
பாதன மாகப் பரிந்தது பார்த்தே. 37

பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே ஆய்ந்தறி வார் இல்லை
காத்துடல் உள்ளே கருதி இருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே 38

உகங்கண்ட ஒன்பது குண்டமும் ஒக்க
அகங்கண்ட யோகியுள்நாடி எழுப்பும்
பயங்கண்டு கொண்டஇப் பாய்கரு ஒப்பச்
சகங்கண்டு கொண்டது சாதன மாவே. 39

சாதனை நாலு தழல்மூன்று வில்வயம்
வேதனை வட்டம் விளையாறு பூநிலை
போதனை போது ஐஞ்சு பொற்கய வாரணம்
நாதனை நாடு நவகோடி தானே. 40



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

| | |
|---|---|
| சபரிமலை தன்னில் வாழும் சாஸ்தாவுக்கு | மங்களம் |
| தவமுனிவர் போற்றும் அந்த சன்னதிக்கு | மங்களம் |
| இபமுகவன் முருகனுக்கு இளையோனுக்கு | மங்களம் |
| இன்பமெல்லாம் தந்தருளும் இறைவனுக்கு | மங்களம் |
| புலிமிசையே பவனிவரும் புனிதனுக்கு | மங்களம் |
| புவிமயங்கும் மோகினியாள் புதல்வனுக்கு | மங்களம் |
| அன்புடனே அருள்புரியும் ஐயப்பனுக்கு | மங்களம் |
| அழகே உருவான எங்கள் மெய்யப்பனுக்கு | மங்களம் |
| வெற்றிதரும் வில்லெடுத்த வேந்தனுக்கு | மங்களம் |
| வித்தகனாம் வீரமணி கண்டனுக்கு | மங்களம் |
| பம்பைநதி சேருகின்ற பக்தருக்கு | மங்களம் |
| பந்தளன்பேர் பாடுகின்ற அனைவருக்கும் | மங்களம் |
| அச்சங்கோவில் அரசனுக்கும் ஆரியங்கா | ஐயனுக்கும் |
| குளத்துப்புழை பாலனுக்கும் குழந்தை மணி | கண்டனுக்கும் |
| எரிமேலி சாஸ்தாவுக்கும் என் குரு | நாதனுக்கும் |
| கன்னிமூலை கணபதிக்கும் காவல்காக்கும் | கருப்பனுக்கும் |
| நாக ராஜனுக்கும் மாளிகைபுரத்து மஞ்சமாதா | தேவிக்கும் |
| வாவர் சுவாமிக்கும் வாமனன் | மைந்தனுக்கும் |
| ஆதி சக்தி அம்பிகைக்கும் ஆனந்தகோடி | மங்களம் |
| ஞானகீதம் ஏற்றி என்றும் நாமகீதம் | பாடுவோம் |
| மங்களம் ஜெயமங்களம் நித்ய | சுபமங்களம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொன்னு பதினெட்டாம் படி மேல் வாழும். ஓம் ஸ்ரீ அரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் சுவாமியே சரணம் ஐயப்பா. காசி, ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம், இலங்கை யாழ்நகர் உரும்பிராய்,கட்டுவன், சபரீசவாசம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ அரிஹரசுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சாமி யே சரணம் ஐயப்பா.

தினமும் ஐயன் 108 சரண கோவையை காலை மாலை பாராயணம் செய்து இஷ்டசித்திகளை அடையுங்கள்.

**ஓம் சாமியே சரணம்**

**ஓம் சாந்தி...!!!**

**அன்பே சிவம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Tharraneiy printers & Arts
No: 541, (426, 306), K.K.S Road,
Monohara Theater View,
Jaffna.
T.P : 0215673012, 0789141286

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org